செ.கு.எண் : 135

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.4.2012

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சங்கரபாண்டியபுரம் கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 27.3.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் சிவகாசி வட்டம், கன்னகுடும்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பசாமி என்பவரின் மகன் திரு. வீட்டுராஜா மற்றும் புல்லகவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் பெருமாள்சாமி ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 1.4.2012 அன்று உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த வீட்டுராஜா மற்றும் பெருமாள்சாமியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. வீட்டுராஜா மற்றும் திரு. பெருமாள்சாமி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்